# 9

# உயிரோடிருந்து வேண்டுதல் செய்கிறவர்

## (எபிரெயர் 7:25)

ஒரு நாள் காலை வேளையில் சாமுவேல் கிளெமென்ஸ்[1] என்பவர் செய்தித்தாளைப் பிரித்தபோது, அதில் தமது மரணம் பற்றிய அறிவிப்பு ஒன்றைக் கண்டு திகைத்துப்போனார். சற்று நேரம் கழித்து, திரு கிளெமென்ஸ் ஒரு விரிவுரையைப் பின்வரும் தொடக்க வார்த்தைகளைக் கொண்டு நிகழ்த்தினார். "எனது மரணம் பற்றிய அறிவிப்பு ஒரு மிகையான கூற்றாக உள்ளது."[2] பல ஆண்டுகளுக்கு முன்பு உலகமானது "தேவன் இறந்துவிட்டார்" என்ற இயக்கத்தை அனுபவித்து உணர்ந்தது. வேதாகமம் இறந்துபோன புத்தகம் என்று சிலர் வலியுறுத்துகின்றனர். மேலும் கிறிஸ்தவமானது வழக்கற்றதாக உள்ளது எனவே அது விட்டொழிக்கப்பட வேண்டும் என்று அவிசுவாசிகள் உறுதியாகக் கூறுகின்றனர். தேவனுடைய மற்றும் கிறிஸ்தவத்தினுடைய மரணம் என்பது ஒரு மிகையான கூற்றாக உள்ளது!

இன்றைய நாட்களிலும் *கிறிஸ்தவம் உயிருடன் உள்ளது* மற்றும் *அது நலமாக உள்ளது* என்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். நாம் ஜீவனுள்ள ஒரு தேவனை (1 தீமோத்தேயு 4:10), ஜீவனுள்ள ஒரு புத்தகத்தை (எபிரெயர் 4:12), ஜீவனுள்ள நம்பிக்கையைக் கொண்டுள்ளோம் (1 பேதுரு 1:4). இந்தத் தலைப்புக்களில் எதைப் பற்றியாவது அல்லது எல்லாவற்றையும் பற்றியாவது நாம் பயன் நிறைந்த வகையில் பேச முடியும்; ஆனால் கிறிஸ்தவம் ஜீவனுள்ளதாக இருக்கிறது மற்றும் நலமாக இருக்கிறது என்பதற்கு நிரூபணம் என்ற வகையில் நாம், மிகக் கொஞ்சமாக அறியப்பட்ட ஒரு உதாரணத்திற்குச் செல்வோம்: நாம், *உயிரோடிருந்து வேண்டுதல் செய்கிறவரைக்* கொண்டிருக்கிறோம். எபிரெயர் 7:25ம் வசனம் நமது வேதபாடப் பகுதியாக உள்ளது: "மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் *சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் (இயேசு) எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால்* அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). இவ்வசனப் பகுதியின் சத்தியங்களை முழுமையான அளவுக்கு மதித்து உணர்வதற்கு நாம் இதை சந்தர்ப்பப்பொருளில் காண்பது அவசியமாக உள்ளது. முதலாவது நாம் எபிரெயர் 7ம் அதிகாரம் முழுவதையும் ஒரு சிலகணங்கள் எடுத்துக் கொள்வோம்; பின்பு நாம் நமது வசனப்பகுதிக்கு முன்னும் பின்னும் உள்ள வசனங்களைச் சுருக்கமாகக் கண்ணோக்குவோம். கடைசியாக நாம் 25ம் வசனத்தின் மீது கவனம் குவிப்போம்.

# எபிரெயர் 7

*"மேன்மையான" என்பது எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது. பெயர்குறிப்பிடப்படாத ஒரு சபைக்குழுத்தில் இருந்த யூதக்கிறிஸ்தவர்களில் சிலரோ அல்லது எல்லாருமோ யூதமார்க்கத்திற்குத் திரும்புதலைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தனர் என்பது தெளிவு. கிறிஸ்தவத்தின் தொடக்க நாட்களில் மாபெரும் மன எழுச்சி அதன் பண்பாக இருந்தது, ஆனால் [காலப்போக்கில்] அதில் கொஞ்சம் தணிந்து போயிருந்தது. இப்போது இந்த உறுப்பினர்கள் யூதத்துவத்தின் சடங்குகள் மற்றும் சடங்காச்சாரங்களை இழந்ததால் ஏற்பட்ட வருத்தம் கொண்டிருந்தனர் என்று காணப்படுகிறது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், கிறிஸ்தவத்தில் உள்ள ஒவ்வொன்றும் யூதத்துவத்தில் இருந்ததைக் காட்டிலும் மேன்மையானது என்று காண்பிப்பதன் மூலம் அவர்களை மந்தைக்குத் திரும்பக் கொண்டுவர முயற்சிசெய்தார்.*

*7ம் அதிகாரத்தை மேம்போக்காகக் கண்ணோக்கி, "மேன்மையான" என்ற வார்த்தையை அடிக்கோடிடுங்கள். 7ம் வசனத்தில் "பெரியவன்" என்ற வார்த்தை காணப்படுகிறது. 19ம் வசனம் "அதிக நன்மையான நம்பிக்கை"யைப் பற்றி பேசுகிறது. 22ம் வசனம் "விசேஷித்த உடன்படிக்கை"யைக் குறிப்பிடுகிறது. 7ம் அதிகாரத்தில் கிறிஸ்தவத்தின்* மேன்மையான ஆசாரியத்துவம் *என்பது குறிப்பிடத்தக்க தலைப்பாக உள்ளது. 17ம், வசனத்தில் நாம் "'நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்' என்று சொல்லிய சாட்சிக்குத்தக்கதாக அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார்" என்று வாசிக்கிறோம். மெல்கிசேதேக்கின் முறைமைப்படி ஆசாரியராக இருந்தவர், லேவியின் முறைமைப்படி ஆசாரியர்களாக இருந்தவர்களைக் காட்டிலும் அளவற்ற வகையில் மேன்மையுடையவராக இருந்தார் என்று எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் நிலைநாட்டினார்.*

*பதட்டப்படாதீர்கள்; நாம் "புதிரான மெல்கிசேதேக்கு" பற்றிக் கலந்துரையாடப் போவதில்லை.[3] 17ம் வசனத்தில் பின்வருபவையே திறவுகோல் வார்த்தைகளாக உள்ளன: "நீர்* என்றென்றைக்கும் *ஆசாரியராயிருக்கிறீர்."*

# எபிரெயர் 7:20-28

இப்போது நாம் நமது வேதவசனப் பகுதியின் உடனடி சந்தர்ப்பப் பொருளின்மீது கவனம் குவிக்கக் கடந்து செல்வோமாக: 20முதல் 28 வரையுள்ள வசனங்கள். இவ்வசனப் பகுதி பின்வருமாறு தொடங்குகிறது:

> அன்றியும், அவர்கள் [லேவியத்துவ ஆசாரியர்கள்] ஆணையில்லாமல் ஆசாரியராக்கப்படுகிறார்கள்; இவரோ [இயேசுவோ]: நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி "'என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்' என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம்மாறாமலும் இருப்பார்" என்று தம்முடனே சொன்னவராலே ஆணையோடே ஆசாரியரானார் (வசனம் 20).

இதற்கான மேற்கோள், புதிய ஏற்பாட்டுப் பேச்சாளர்களும் எழுத்தாளர்களும், மேசியாவின் உயிர்த்தெழுதல், பரத்துக்கேறுதல்

மற்றும் மகிமைப்படுதல் ஆகியவற்றைப் பற்றிய தீர்க்கதரிசனம் என்று கருதிய 110ம் சங்கீதத்தில் இருந்து வருகிறது (நடபடிகள் 2:34, 35; காண்க 1 கொரிந்தியர் 15:25; எபேசியர் 1:20). எபிரெயர் 7:17ம் வசனம் சங்கீதம் 110:4ல் இருந்து மேற்கோள் காண்பிக்கிறது: " 'நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின் படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்' என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலுமிருப்பார்." "கர்த்தர் வெறுமனே சிலவற்றைக் *கூறுகிறபோது* அது *உண்மையாக* உள்ளது. எனவே அதை அவர், ஒரு ஆணையுடன்" கூறும் போது அது "இரட்டிப்பான உண்மை, மும்மடங்கு உண்மை, நான்கு மடங்கு உண்மை" என்ற வகையில் நாம் நினைக்கலாம்! அதைப் பற்றிச் சந்தேகம் *இல்லாதிருக்கிறது?* இயேசு *என்றென்றைக்கும்* ஆசாரியராயிருக்கிறார்.

22ம் வசனம், இயேசு "அவ்வளவு விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்" என்று தொடருகிறது. இயேசு நமது ஆவிக்குரிய "பிணையாளியாக" இருக்கிறார். கடனுக்கான பிணையாளி, கடன் திரும்பச் செலுத்தப்படுவதை உத்தரவாதப்படுத்துகிறார். தேவனுடைய புதிய உடன்படிக்கையின் ஆச்சரியமான வாக்குத்தங்கள் நிறைவேற்றப்படும் என்பதற்கு இயேசு நமக்கு உத்தரவாதமாக இருக்கிறார்!

23ம் வசனம், "அன்றியும், அவர்கள் [லேவியத்துவ ஆசாரியர்கள்] மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக் கூடாதவர்களானபடியால், ஆசாரியராக்கப்படுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள்" என்று கூறுகிறது. ஆரோன் முதற்கொண்டு எபிரெயருக்கு நிருபம் எழுதப்பட்ட காலம் வரையிலும் இருந்த எல்லா ஆசாரியர்களைப் பற்றியும் நினைத்துப் பாருங்கள். லேவியர்களில் நூற்றுக்கணக்கானவர்கள் அல்லது ஆயிரக்கணக்கானவர்கள் ஆசாரியர்களாக ஊழியம் செய்திருந்தனர், ஏனென்றால் எப்பொழுதும் ஒரு ஆசாரியர் இருத்தல் முக்கியமானதாக இருந்தது. "ஒரு ஆசாரியர் இருத்தல் அவசியமானது என்றால், எல்லாக் காலத்திற்கும் ஒருவர் இருத்தலுக்கான தேவை இருந்தது; பணிசெய்பவர் மாறினாலும் அந்தபணியானது எவ்வித இடைவேளையின்றி நிரம்பியிருக்க வேண்டும்."[4] ஆசாரியர்கள் ஒருவர் பின் ஒருவராக வாழ்ந்து மரித்தனர். சிலர் நல்லவர்களாக இருந்தனர், சிலர் அவ்வளவு நல்லவர்களாக இல்லை, சிலர் மிக மிக மோசமானவர்களாக இருந்தனர்.

24ம் வசனத்தில் நாம், "இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிற படியினாலே மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார்" என்று வாசிக்கிறோம். பின்வரும் வார்த்தைகளைக் கவனியுங்கள்: "இவரோ *என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே.* இயேசு மரித்தோரில் இருந்து எழுப்பப்பட்டார்." அவர் தேவனிடத்திற்குத் திரும்ப ஏறிப்போனார், தேவனுடைய வலது புறத்தில் அமர்ந்தார், மற்றும் அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறார்! ஆகவே அவரது ஆசாரியத்துவத்தில் மாற்றம் எதுவும் இல்லை. அவர் "என்றென்றைக்கும்" நமது ஆசாரியராக இருக்கிறார்!

அது நம்மை நமது வேதபாடப் பகுதிக்குக் கொண்டு வருகிறது. 25ம் வசனம் "தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" என்று கூறுகிறது. "முற்றுமுடிய இரட்சிக்க" என்ற சொற்றொடரில் "முற்றுமுடிய" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை, "முழுமையான, பூரணமான" என்று அர்த்தப்படுகிறது.[5] KJV வேதாகமத்தில் "save ... to the uttermost" ["முற்றிலுமாக இரட்சிக்க"] என்றுள்ளது;

ஆனால் இது காலத்தையும் குறிக்கக் கூடும், எனவே NASB வேதாகமத்தில் "save forever" ["காலமுழுவதும்"] என்றுள்ளது; ஒருவேளை இதன் எழுந்தாளர் இவ்விரு அர்த்தங்களையும் உள்ளடக்க நோக்கங் கொண்டு இருந்திருக்கலாம்: இயேசு நம்மை எல்லா *வழியிலும் முற்றிலுமாக* இரட்சிக்கக் கூடியவராக இருக்கிறார். 25ம் வசனத்தில் "தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால்" என்றும் கூறப்படுகிறது. அந்த வார்த்தைகளைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்; சற்று நேரத்தில் நாம் அவற்றிற்குத் திரும்புவோம்.

இவ்வசனப்பகுதி பின்வருமாறு முடிகிறது:

> பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார். அவர் பிரதான ஆசாரியர்களைப்போல முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் [பரிகரிப்பு நாளில் பிரதான ஆசாரியர் செய்தது போல] நாடோறும் பலியிடவேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை [இயேசு] ஒரேதரம் செய்துமுடித்தார். நியாயப்பிரமாணமானது பலவீனமுள்ள மனுஷர்களைப் பிரதான ஆசாரியராக ஏற்படுத்துகிறது; நியாயப்பிரமாணத்திற்குப்பின்பு [சங்கீதமானது மோசேக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட நூற்றக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்பு எழுதப்பட்டது] உண்டான [சங்கீதம் 110:4ல் உள்ள] ஆணையோடே விளங்கிய வசனமோ என்றென்றைக்கும் பூரணமான குமரனை ஏற்படுத்துகிறது (வசனங்கள் 26-28).

## எபிரெயர் 7:25

நாம் நமது வேதப்பாடப் பகுதியை இன்னும் நெருக்கமாக ஆய்வு செய்யத் தயாராக இருக்கவேண்டும்: "மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (வசனம் 25). நாம் இவ்வசனத்தில் இருந்து இரண்டு திறவுகோல் சிந்தனைகளை இழுத்தெடுப்போம்.

**"இயேசு உயிரோடிருக்கிறார் ..."**

முதலாவது, "அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறார்." இயேசு பிரதான கட்டளையைக் கொடுத்த பின்பு, தமது சீஷர்களிடத்தில் "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் *சகல நாட்களிலும்* நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்று கூறினார் (மத்தேயு 28:20 ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). ரோமருக்குப் பவுல், "மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை" என்று எழுதினார் (ரோமர் 6:9).[6] எபிரெயருக்கு எழுதிய நிருபம் 7ம் அதிகாரம், இயேசு என்றென்றைக்கும் ஆசாரியராக இருக்கிறார் என்று மீண்டும் மீண்டுமாக உரைக்கிறது.

***"... நமக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு"***

*இயேசு எப்பொழுதும் நம்முடன் இருப்பது ஏன்? "'[தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக'] வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறார்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). "வேண்டுதல்" என்றால் என்ன? இவ்வார்த்தை, இன்னொருவரின் சார்பாக வேண்டிக்கேட்டுக் கொள்வதைக் குறிக்கிறது.*[7]

*மேசியா வேண்டுதல் செய்பவராக இருப்பார் என்று அவரைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்தது. பாடுபடும் ஊழியக்காரர் பற்றிய மாபெரும் வசனப்பகுதியான ஏசாயா 53ல் நாம் பின்வருமாறு வாசிக்கிறோம்:*

> *அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார் (வசனம் 12).*

*சிலுவையில் அறையப்படுதல் என்பதே இவ்விடத்தில் காட்சியமைப்பாக உள்ளது, எனவே இயேசு தம்மைச் சித்திரவதை செய்தவர்களுக்காக வேண்டிக் கொள்ளுதலுக்கு இங்கு குறிப்பு இருக்கலாம்: "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லுக்கா 23:34அ). இயேசு சிலுவையில் செய்த இதே செயலை அவர் பூமியில் தமது சொந்த ஊழியத்தின் போதும் செய்தார் மற்றும் இப்போது பரலோகத்தில் அவர் தமது ஆசாரியத்துவ ஊழியத்தின் பகுதி என்ற வகையில் அதைச் செய்துகொண்டிருக்கிறார்.*

*அவர் பூமிக்குரிய தமது ஊழியத்தின்போது, பேதுருவிடத்தில் "நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" என்று கூறினார் (லூக்கா 22:32).*[8] *இயேசுவின் வேண்டுதல் செய்தலுக்கு, யோவான் 17ல் உள்ள பிரதான - ஆசாரியாத்துவ ஜெபம் இன்னொரு உதாரணமாக உள்ளது. அவர் முதலாவது அப்போஸ்தலர்களுக்காக வேண்டிக் கொண்டார்: "நான் அவர்களுக்காக [அப்போஸ்தலர்களுக்காக] வேண்டிக்கொள்கிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே" (வசனம் 9; காண்க வசனம் 15). பின்பு இயேசு நமக்காக வேண்டுதல் செய்தார். 20ம் வசனத்தைக் கவனியுங்கள்: "நான் இவர்களுக்காக [அப்போஸ்தலர்களுக்காக] வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் [இது புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்களின் சாட்சியத்தின் காரணமாக இயேசுவில் விசுவாசம் கொள்ளுகிற நம்மையும் மற்ற எல்லாரையும் குறிக்கிறது] வேண்டிக்கொள்ளுகிறேன்."*[9]

*இயேசு பூமியில் செய்ததைப் பரலோகத்திலும் தொடர்ந்து செய்கிறார். எபிரெயக் கிறிஸ்தவர்களுக்கு நிருபத்தை எழுதியவர் இதை வலியுறுத்தினார். முதலாவதாக நாம் எபிரெயர் 2ல் இருந்து வாசிப்போமாக:*

> *அன்றியும், அவர் [இயேசு] ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி*

> *செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது. ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுக்கிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் (வசனங்கள் 17, 18).*

*இப்போது நாம் இவ்வசனப் பகுதியானது எபிரெயர் 4ல் உள்ள வசனப்பகுதியுடன் எவ்வாறு பிணைக்கப்படுகிறது என்று காண்போமாக:*

> *வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக்கடவோம். நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (வசனங்கள் 14-16).*

*“நமது பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கும்” ஒரு பிரதான ஆசாரியரை நாம் கொண்டுள்ளோம். KJV வேதாகமத்தில் “நமது பலவீனங்களின் உணர்வுகளால் தொடப்பட்ட” என்றுள்ளது. மாற்கு 7ம் அதிகாரத்தில் இயேசு, செவிடும் ஊமையுமான ஒரு நபரைக் குணமாக்கியபோது, அவர் “வானத்தை அண்ணாந்துபார்த்து,* பெருமூச்சுவிட்டு*” (வசனம் 34; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்றுள்ளது. மரியாளும் லாசருவின் நண்பர்களும் அழுதுகொண்டிருப்பதை இயேசு கண்டபோது, அவர் “*ஆவியிலே கலங்கித் துயரமடைந்து*” (யோவான் 11:33; என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்றுள்ளது.*

*இயேசு “எல்லாவற்றிலும்” நம்மைப் போலாக்கப்பட்டதாலும் அவர் “நம்மைப்போலவே எல்லாவற்றிலும் சோதிக்கப்பட்டு” இருந்ததாலும், அவர் “நமது பலவீனங்களைக் குறித்துப் பரிதவிக்க” முடியும். என்னைப் படைத்தவர் என்னை அறிகிறார் என்று நான் மதிநுட்பமாக (என் தலையில்) அறிகிறேன் (காண்க சங்கீதம் 103:14), ஆனால் இது, இயேசு உண்மையில் என்னைப் போல் ஆனார் மற்றும் மாம்சத்தில் என் போராட்டங்களை உண்மையாகப் புரிந்துகொள்கிறார் என்றும் (என் இருதயத்தில்) அறிவதற்கு உணர்வுப்பூர்வமாக உதவுகிறது.*

*யாரேனும் ஒருவர் பின்வருமாறு மறுப்புரை தெரிவிக்கலாம்: “ஆனால் நான் கொண்டுள்ள குறிப்பான பிரச்சனையை இயேசு ஒருக்காலும் கையாள வேண்டியிருந்தது இல்லையே!” எடுத்துக்காட்டாக ஒருவர், “இயேசு தம்மைக் கைவிட்ட துணை ஒன்றை ஒருக்காலும் கொண்டிருந்தது இல்லையே!” என்று கூறலாம். சபையே இயேசுவின் மணவாட்டியாக உள்ளது (காண்க எபேசியர் 5:22-32; 2 கொரிந்தியர் 11:2). சபையானது எப்போதுமே இயேசுவுக்கு உண்மையுள்ளதாக நிலைத்திருக்கிறதா? இன்னொருவர், “ஆனால் இயேசு,*

உண்மையற்ற மற்றும் கீழ்ப்படிதல் அற்ற பிள்ளைகளை ஒருக்காலும் கையாள வேண்டியிருந்தது இல்லையே!" என்று கூறி மறுப்புரை தெரிவிக்கலாம் கர்த்தர் தமது பிள்ளைகளைக் கொண்டிருந்தார் (காண்க எபேசியர் 5:8). அவரது பிள்ளைகள் சிலவேளைகளில் அவரது இருதயத்தை உடையச் செய்வதில்லையா?

ஒரு கடைசி மறுப்புரை பின்வருமாறு தெரிவிக்கப்படலாம்: "ஆனால் இயேசு சுமார் முப்பது வயதுடையவராக இருக்கும்போது அவர் மரித்தார். அவர் ஒருக்காலும் முதிய வயதின் உடல்நலக் குறைவினால் பாதிக்கப்பட்டதில்லையே!" இருந்தபோதிலும் அவர் (அதைப்) புரிந்துகொள்கிறார். "நான் முதியவனாக உணருகிறேன்" என்பது பொதுவாகக் கேள்விப்படக் கூடிய சொற்றொடராக உள்ளது, ஆனால் "முதியவராக உணருதல்" என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? நான் கண்ணாடியில் என் முகத்தைப் பார்க்கும்போது மாத்திரமே என்னை "முதியவனாக" உணருகிறேன். அதைத்தவிர, முதியவனாகுதல் என்பதுடன் இணைவுகொண்டுள்ள தனிப்பட்ட உணர்வு எதையும் என்னால் நினைத்துப் பார்க்க முடிவதில்லை. எனது எழுபது வயதுகளில் நான் எவ்வாறு உணருகிறேன்? பொதுவாக நான் களைப்பையும் சக்தி தீர்ந்த நிலையையும் உணருகிறேன்; நான், வலிகளும் வேதனைகளும் கொண்டுள்ளேன். இதைப் பற்றி நினைத்துப் பாருங்கள்: இயேசு எப்போதாவது களைப்பாக உணர்ந்தாரா? இயேசு எப்போதாவது வேதனையை உணர்ந்தாரா?

ஒரு முறை, G. C. புரூவர் என்பவர் பல துன்பங்களைக் கடந்து சென்றிருந்த ஒரு மனிதரால் அறைகூவல் விடப்பட்டார். அம்மனிதர், "இப்படிப்பட்ட அனுபவத்தை இயேசு ஒருக்காலும் கொண்டிருக்கவில்லை ... நான் துன்புறுதல்பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது ..." என்று கூறினார். சகோதரர் புரூவர் பின்வருமாறு பதில் அளித்தார்:

> என் சகோதரனே, நமது கர்த்தராகிய கிறிஸ்து உங்கள் உணர்வுகளையும் உங்களுக்கு நேர்ந்த மாபெரும் சோதனையையும் அறிகிறார் மற்றும் அவர் மாத்திரமே உங்களை மேலே கொண்டுவந்து உங்கள் இருதயத்தைக் குணமாக்க முடியும் என்று உங்களுக்குக் கூறுகிறேன். கிறிஸ்து மனிதர்கள் மத்தியில் வாழ்ந்த வேளையில் இதேபோன்ற அனுபவத்தை ஒருக்காலும் கொண்டிருந்தது இல்லை என்பது உண்மையே, ஆனால் ஒரு உணர்வை அறிவதற்கு நாம் அதை அனுபவித்தே ஆக வேண்டும் என்பது அவசியமில்லையே. இதை விளக்கப்படுத்துகிறேன்: நீங்கள் சிரித்திருக்கிறீர்கள் மற்றும் நான் சிரித்திருக்கிறேன். நீங்கள் ஒரு விஷயத்திற்காகச் சிரித்திருப்பீர்கள் மற்றும் நான்வேறு ஒரு விஷயத்திற்காகச் சிரித்திருப்பேன், ஆனால் நாம் இருவரும் *சிரித்தலை* அறிகிறோம். நீங்கள் அழுதிருக்கிறீர்கள் மற்றும் நான் அழுதிருக்கிறேன். நீங்கள் அழ ஒரு விஷயம் காரணமாயிருந்தது மற்றும் நான் அழ இன்னொரு விஷயம் காரணமாயிருந்தது மற்றும், ஆனால் அழுதல் என்றால் என்ன என்பதை நாம் இருவருமே அறிந்திருக்கிறோம். நாம் இருவருமே கோபமாக இருந்திருக்கிறோம். நமது கோப[ங்கள்] ஒரேவிதமான அனுபவத்தினால் தூண்டப்படவில்லை, ஆனால் நாம் இருவருமே கோபப்பட அறிந்திருக்கிறோம்.

> இங்கு ஒரு இசைக்கருவி உள்ளது. இது இசையில் உள்ள தொனிகளின் சுரங்கள் எல்லாவற்றையும் கொண்டுள்ளது மற்றும் ஒவ்வொரு தொனியும் இதனால் ஏற்படுத்தப்பட்டுள்ளது: ஒவ்வொரு நாணும் அதிர்ந்திருக்கின்றன, ஆனால் இதுவரை அமைக்கப்பட்டுள்ள இசையின் ஒவ்வொரு துணுக்கும் இந்த இசைக் கருவியில் இசைக்கப்பட்டது இல்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பல இசையமைப்புகள் இந்தச் சாவிப்பலகைக்கு ஒருக்காலும் தரவழைக்கப்பட்டது இல்லை, ஆனால் அவற்றில் உள்ள ஒவ்வொரு தொனியும் இங்கு ஒலித்துள்ளது.
>
> இப்போது, மனித இருதயம் என்பது ஆயிரம் நரம்புகள் கொண்ட ஒரு சுரமண்டலமாக உள்ளது. இது இசைக் கருவியினுடையது போன்று நரம்புகளைக் கொண்டுள்ளது மற்றும் நமது கர்த்தராகிய கிறிஸ்து அதன் ஒவ்வொரு நாணையும் தொட்டிருக்கிறார். அவர் ஒவ்வொரு உணர்வையும் அறிகிறார்.[10]

எபிரெருக்கு எழுதிய நிருபத்தில் நாம் வாசிக்க விரும்பும் அடுத்த வசனப் பகுதிக்கு கடந்து செல்லுகையில் நாம் நமது முதன்மை வசனப்பகுதியைக் காணுகிறோம்: "மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவ ராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (7:25). ரெய்மண்ட் பிரவுன் என்பவர், "ரபீக்கள் மக்களின் சார்பாக வேண்டுதல் செய்தல் என்பது தூதர்களுக்கும் மற்றும் குறிப்பாக பிரதான தூதனான மிக்காவேலுக்கும் ஒப்புவிக்கப்பட்ட ஊழியமாகும் என்ற கருத்தைப் பராமரித்தனர்'' என்று எழுதினார். பின்பு அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> [இயேசு] நமக்காக *அர்த்தம் நிறைந்த வகையில்* வேண்டுதல் செய்கிறார், ஏனெனில் தூதர்களைப் போலின்றி அவர் நமக்கு நேரிடும் சோதனைகளைப் பற்றிய நேரடி அனுபவம் கொண்டிருக்கிறார். அவர் *பரிவிரக்கத்துடன்* நமக்காக வேண்டுதல் செய்கிறார், ஏனெனில் தூதர்களைப் போலின்றி, அவர் நமக்கு மிகச்சரியாகத் தேவைப்படுவது என்ன என்பதை அறிந்திருக்கிறார். அவர் நமக்காகச் *செயல்விளைவுடன்* வேண்டுதல் செய்கிறார், ஏனெனில் தூதர்களைப் போலின்றி அவர் நமது தேவைகளைச் சந்திக்க வல்லமை கொண்டிருக்கிறார்.[11]

எபிரெருக்கு எழுதிய நிருபத்தை விட்டு நாம் கடந்து செல்வதற்கு முன்பு, கடைசியாக ஒரு வசனத்தை நாம் கவனிப்போமாக: "அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி, பிரவேசித்திருக்கிறார்'' (9:24).

எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், இயேசு நமக்காக வேண்டுதல் செய்ய எப்போதும் உயிருள்ளவராக இருக்கிறார் என்பதை அறிவித்த ஒரே ஒருவராக இருப்பதில்லை. இதே சத்தியத்தைப் பவுல், ரோமர் 8ல் பின்வருமாறு எடுத்துரைத்தார்:

> இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ் சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே (வசனங்கள் 31-34).

நமக்கு எதிராகக் குற்றச்சாட்டைக் கொண்டுவரத் தகுதியுள்ளவர்கள் இருவர் மட்டுமே. முதலாமவர் தேவன் - மற்றும் அவர் "நமக்காக" நமது பக்கமாக இருக்கிறார். இரண்டாமவர் இயேசு - மற்றும் அவர் நமக்காக மரித்தார் இப்போது தேவனுடைய வலதுபுறம் இருந்து கொண்டு நமக்காக வேண்டுதல் செய்கிறார்![12]

நமக்காக இயேசு வேண்டுதல் செய்வதை வலியுறுத்திய, ஏவுதல் பெற்ற இன்னொரு எழுத்தாளர் யோவான் ஆவார், ஆனால் அவர் வேறுபட்ட சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்தினார்: "ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் *பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்*" (1 யோவான் 2:1ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "பரிந்துபேசுகிறவர்" என்பது, உதவியளிப்பதற்காக உங்கள் பக்கமாக அழைக்கப்பட்டுள்ள ஒருவரைக் குறிக்கும் *parakletos* என்ற வார்த்தையில் இருந்து வருகிறது.[13] இவ்வசனப் பகுதியில் "பரிந்துபேசுபவர்" என்பது சட்டப்பூர்வமான கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது: உங்கள் வழக்கைப் பரிந்துரைக்கும் ஒருவர். நாம் நீதிமன்றத்தில் சென்று வாதாட வேண்டியிருந்தால், நம்மாலானமட்டும் மிகச்சிறப்பான தற்காப்பு வாதத்தை பணத்தைக் கொண்டுவாங்கக் கூடிய சிறந்த சட்டபூர்வமான பிரதிநிதித்துவத்தை - நாம் விரும்புவோம் - நம்மில் பெரும்பான்மையானவர்கள், நம்மால் பெறக்கூடியவற்றைக் கொண்டு வாதம் செய்ய வேண்டியிருக்கும் - இருப்பினும் ஆவிக்குரிய வகையில் நாம் மிகச்சிறந்த - பரலோகத்தினால் அளிக்கப்படக்கூடிய மிகச்சிறந்த - "தற்காப்பு வாதம் செய்யும் வழக்கறிஞரை" கொண்டிருக்கிறோம்: நீதிபரராகிய இயேசு கிறிஸ்து!

ஆண்டுகளினூடே, இயேசு நமக்காக *எவ்வாறு* பரிந்துரைசெய்கிறார் என்பதைப் பற்றி மிகச்சரியாகத் தெரிந்துகொள்ள, ஆண்டுகளினூடே கணிசமான அளவுக்கு நேர்மாறாக கருத்துப் போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன. சிலர், இயேசு கடின முகங்கொண்ட பிதாவின் முன் நின்று, அவரது பிள்ளைகளை மன்னித்து உதவும்படி கெஞ்சுவதாகச் சித்தரித்துள்ளனர். கிறிஸ்து வேண்டுதல் செய்தல் குறித்து அவ்விதமான கருத்தை நமது மனதில் நாம் கொண்டிருந்தால் அதை உடனடியாக நீக்க வேண்டியது அவசியமாக உள்ளது. "தேவன் *நம்முடைய பட்சத்திலிருந்தால்*" என்று கூறுகிற ரோமர் 8:31ஆம் வசனத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

கிறிஸ்து நமக்காக எவ்வாறு வேண்டுதல் செய்கிறார் அல்லது அவரது வேண்டுதலில் அடங்கியுள்ளது எது என்பதை அறிதல் நமக்கு அவசியமற்றதாக உள்ளது. அதை அவர் செய்கிறார் என்பதை மாத்திரம் அறிதலே அவசியமாக

உள்ளது. ராபர்ட் மில்லிக்கன் என்பவர் "*வேண்டுதல் செய்கிறார்* என்ற வார்த்தை ... இவ்விடத்தில் மிகவும் புரிந்துகொள்ளக் கூடிய கருத்தில், இயேசு தமது மக்கள் நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தப்படுத்தப்படுதல் மற்றும் மீட்கப்படுதல் ஆகியவற்றிற்காகச் செய்யும் எல்லாவற்றையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது" என்று கூறியது அனேகமாக சரியானதாக இருக்கவேண்டும்.[14] "எவ்வாறு" என்பதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். பின்வரும் சத்தியத்தில் மட்டும் களிகூருங்கள்: அவர் *உங்களுக்காக* வேண்டுதல் செய்ய எப்போதும் உயிருள்ளவராக இருக்கிறார்.

இவ்வசனப் பகுதியானது *நிகழ்கால* வினைச்சொல்லைப் பயன்படுத்துவதைக் கவனியுங்கள்: அவர் "*உயிருள்ளவராயிருந்தார்*" என்றோ அல்லது "அவர் உயிருள்ள*வராயிருப்பார்*" என்றோ அல்ல, ஆனால் "அவர் உயிருள்*ளவராயிருக்கிறார்*" - "அவர் என்றென்றைக்கும் உயிருள்ளவராயிருக்கிறார்" - என்றே உள்ளது. ஆண்டுக்கு ஆண்டு, மாதத்திற்கு மாதம், வாரத்திற்கு வாரம், நாளுக்கு நாள், மணிக்கு மணி, நிமிடத்திற்கு நிமிடம் அவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார்! இதைப்பற்றி ஒரு எழுத்தாளர் பின்வருமாறு கூறியதை நான் விரும்புகிறேன்: நாம் இயேசுவைப் பற்றி நினைக்காத போதும்கூட, அவர் நம்மைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறார்![15]

எப்பொழுதும் மாறிக்கொண்டிருக்கும் ஒரு உலகத்தில் பின்வருவது நிலையானதாக உள்ளது: இயேசு உயிருள்ளவராக இருக்கிறார் - அவர் எப்போதுமே உயிருள்ளவராக இருக்கிறார்! - மற்றும் அவர் நமக்காக வேண்டுதல் செய்துகொண்டிருக்கிறார். கொந்தளிப்பின் மத்தியில் நாம் எதைப் பற்றிக் கொள்ள முடியும்? சிலர் உலகப் பொருள்களின் மீது தங்கள் நம்பிக்கையை வைக்கின்றனர், ஆனால் இவைகள் ஒரு நிமிடத்தில் உங்கள் விரல்களில் இருந்து நழுவிவிட முடியும். சிலர் தங்கள் உடல் பலத்தில் நம்பிக்கை வைக்கின்றனர், ஆனால் அது ஒரு நொடிப்பொழுதில் உங்களைவிட்டுச் சென்று விட முடியும். இங்கு நாம் நமது இருதயங்களில் இறுக்கமாகப் பற்றிக்கொள்ளக் கூடிய நிரந்தரமான சில சத்தியங்கள் உள்ளன: இயேசு நம்மீது அன்புகூருகிறார் ... அவர் நமக்காக மரித்தார், மற்றும் நமக்காக அவர் எழுப்பப்பட்டார் ... மற்றும் இப்போது அவர் உயிருள்ளவராக உங்களுக்காக வேண்டுதல் செய்கிறார்! தேவனுக்கு நன்றி, நாம் உயிருள்ளவரான வேண்டுதல் செய்பவர் ஒருவரைக் கொண்டுள்ளோம்!

## முடிவுரை

நமது வேதவசனப் பகுதியின் வாக்குத்தத்தத்தை நீங்கள் கண்ணோக்குகையில், இந்த வாக்குத்தத்தம் நிபந்தனையைக் கொண்டுள்ளது என்ற உண்மையை மறந்துவிட வேண்டாம்: "மேலும், *தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக* வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). தேவன் நம்மீதான தமது அன்பை நூற்றுக்கணக்கான வழிகளில் காண்பித்து இருக்கிறார், ஆனால் விசேஷமாக அவர் தமது குமாரனைச் சிலுவையில் ஒப்புக்கொடுத்ததின் மூலம் தமது அன்பைக் காண்பித்திருக்கிறார் (ரோமர் 5:8) மற்றும் இப்போது

நாம் அவரிடம் கிட்டிச் சேருவதன் மூலம் அவருக்குப் பதில்செயல் செய்ய வேண்டும். யாக்கோபு, “தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்” என்று எழுதினார் (யாக்கோபு 4:8).

நாம் “தேவனிடத்தில் சேருவது” எவ்வாறு? நாம் “*இயேசுவின் மூலமாகவே* அவரிடத்தில் நெருங்கிச் சேருகிறோம்.” இயேசு, “நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” என்று கூறினார் (யோவான் 14:6). இயேசுவைப் பற்றிப் பேசும்போது பேதுரு, “அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” என்று கூறினார் (நடபடிகள் 4:12). நாம் *இயேசுவில்* விசுவாசம் கொள்ள வேண்டும் (யோவான் 8:24), நாம் நமது பாவங்களில் இருந்து மனந்திரும்ப வேண்டும் (லூக்கா 13:3) மற்றும் *இயேசுவிடம் திரும்ப வேண்டும்,* நாம் *இயேசுவின் மீது* கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும் (மத்தேயு 10:32; ரோமர் 10:9), நாம் பாவமன்னிப்பிற்காக *இயேசுவின் நாமத்திலே* ஞானஸ்நானம் பெற வேண்டும் (நடபடிகள் 2:38), அதன் பின்பு நாம் *இயேசுவிற்குள்* புதிய வாழ்வைத் தொடங்க வேண்டும் (ரோமர் 6:3, 4).

நீங்கள் இயேசுவில் விசுவாசம் கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி இருக்கிறீர்களா? நீங்கள் இயேசுவில் கொண்டுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு அவருக்குள் ஞானஸ்நானம் பெறத் தயாராக இருக்கிறீர்களா? நீங்கள் ஏற்கனவே ஒரு கிறிஸ்தவராக இருந்தால், நீங்கள் அவரிடம் திரும்ப வேண்டியது அவசியமாக உள்ளதா? நீங்கள் ஆண்டவரிடம் நெருங்கிச் சேர்ந்தால், அவர் உங்களிடமாய் நெருங்கிச் சேருவார்.

---

குறிப்புகள்

[1]சாமுவேல் கிளமென்ஸ் (1835-1910) என்பவர் அமெரிக்க நாட்டில் நன்கு அறியப்பட்ட எழுத்தாளர்களில் ஒருவர் ஆவார். மார்க் ட்வைன் என்பது அவரது புனைபெயராக இருந்தது. [2]“Death” (http://www.twainquotes.com/Death.html; Internet; accessed 30 April 2008) [3]இவ்விடத்தில் நான் சில வேளைகளில் புன்முறுவலுடன், “மெல்கிசேதேக்கு பற்றி நீங்கள் ஏதேனும் கேள்வி கேட்க வேண்டுமானால், கேளுங்கள் ...” என்று கூறி, சபைக்குழுமத்தில் இருக்கும் மனிதர் ஒருவரின் பெயரைக் குறிப்பிடுவேன். உங்கள் சொந்தத் தகவல்களுக்காக நீங்கள் மெல்கிசேதேக் பற்றி மார்ட்டேல் பேஸ் என்பவருடைய கலந்துரையாடலை, “Melchizedok and Christ” in “Hebrews, 4” *Truth for Today* (April 2006): 4-10 என்ற புத்தகத்தில் மறுகண்ணோட்டம் இடமுடியும். [4]Alexander Balmain Bruce, *The Epistle to the Hebrews,* 2d ed. (Edinburgh: T. & T. Clark, 1899; reprint, Eugene, Oreg.: Wipf & Stock Publishers, n.d.), 277. [5]*Panteles* என்ற வார்த்தை “என்றென்றைக்கும்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது “முழுமையான, பூரணமான” என்று மொழிபெயர்க்கப்பட்ட அதே வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது மற்றும் இது “முற்றுமுடிய” அல்லது “நிறைவாக” என்று அர்த்தப்படக் கூடும் (W.

E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 656). [6]*இயேசு இனி ஒருக்காலும் மரியாதிருக்கும்படி, மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் என்பதற்கு ஒரு சில நிரூபணங்களைப் பட்டியலிடுவதற்கு நேரம் எடுத்துக் கொள்ள நீங்கள் விரும்பலாம். ஹியூகோ மெக்கார்டு என்பவரின்* "The Inspiration & Authority of the Bible," *Truth for Today* (April 2000): 38-39. *என்ற புத்தகத்தில்* "The Greatest Miracle: Jesus' Resurrection" *என்ற பாடம் ஒரு நல்ல ஆதாரமூலமாக உள்ளது.* [7]*The American Heritage Dictionary,* 4th ed. (2001), s.v. "intercede." [8]*இயேசு ஒருவேளை தமது முழு இரவு ஜெபவேளைகளின்போது பேதுருவுக்காக ஜெபித்திருக்கலாம் (காண்க லூக்கா 6:12).* [9]*குறிப்பாக இயேசு, தம்மைப் பின்பற்றுபவர்கள் யாவரும் ஒன்றாயிருக்க வேண்டும் என்று ஜெபித்தார் (காண்க வசனங்கள் 21-23).* [10]G. C. Brewer, *Christ Crucified: A Book of Sermons* (N.p.: 1928; reprint, Nashville: B. C. Goodpasture, 1952), 78-79.

[11]Raymond Brown, *Christ Above All: The Message of Hebrews* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1982), 135-36. (Emphasis mine.) [12]*1 தீமோத்தேயு 2:5 பவுலிடமிருந்து வந்த இன்னொரு வசனப் பகுதி என்ற வகையில் பயன்படுத்தப்படலாம்.* [13]Vine, 111. [14]Robert Milligan, *A Commentary on the Epistle to the Hebrews,* The New Testament Commentary, vol. 9 (Cincinnati: Chase and Hall, 1876; reprint, Nashville: Gospel Advocate Co., 1954), 213. (Emphasis mine.) [15]Adapted from J. N. Darby, *Notes from Lectures on the Epistle to the Hebrews* (London: G. Morrish, n.d.), 63.